4

கோயம்புத்தூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு. கோ. துவாரகநாத்சிங்

ந.க.எண். 15 /2020/பே1

நாள். 20.03.2020

பொருள் : மதிப்பீடுகள் – கருமத்தம்பட்டி பேரூராட்சி
கோயம்புத்தூர் மண்டலம் – 2019–2020 திருத்திய மதிப்பீடு – 2020–2021 திட்ட மதிப்பீடு கூர்ந்தாய்வு செய்து மதிப்புரை வழங்கி அங்கீகரித்தல் – தொடர்பாக.

பார்வை : 1. செயல் அலுவலர் – கருமத்தம்பட்டி பேரூராட்சி
கடிதம் எண். 01/2020/அ, நாள். 19.03.2020
2. தீர்மான எண்.21/2020 நாள். 14.02.2020

1920 ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டத்தின்படி கோயம்புத்தூர் மாவட்டம் கருமத்தம்பட்டி பேரூராட்சி பராமரிப்பு கணக்குகளின்படி 2019–2020–ம் ஆண்டு திருத்திய மதிப்பீடும் , 2020–2021 ம் ஆண்டு திட்ட மதிப்பீடும் தயாரிக்கப் பட்டதை கூர்ந்தாய்வு செய்து கீழ்க்கண்டவாறு மதிப்புரை வழங்கி அங்கீகாரம் செய்யப்படுகிறது.

## வரவினம்

### 1. சொத்துவரி

அ) 2019–2020 ம் ஆண்டு மொத்த கேட்பு தொகையைவிட 2020–2021ஆம் ஆண்டு கேட்பில் 10.00 விழுக்காடுகள் அதிகம். 2020–2021 –ம்ஆண்டு திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள வருமானம் ரூ. அதிகம். 2019–2020ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ. 14000000, 2019–20ம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ரூ. 16000000 வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது

ஆ) காலி மனையிடங்களுக்கு சொத்துவரி விதிக்காமலிருந்தால் இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விபரத்தினை குறிப்பிட வேண்டும். வரிவிதிப்பு செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
காலி மனைகளுக்கு இப்பேரூராட்சி சொத்துவரி விகிதத்தில் விதிக்கப்பட ரூ. 4000000 ஆண்டு கேட்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### 2. தொழில்வரி

அ) திருத்திய நடைமுறைப்படி தொழில்வரி கேட்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா ஆம் எனில் 2019–2020ம் ஆண்டில் பெற்ற ( அ) பெறவிருக்கும் தொழில்வரித் தொகையின் அடிப்படையில் 2020–2021–ல் எதிர்பார்க்கும் தொழில்வரித் தொகை குறிப்பிடப்பட்டுள்ளதா ?

**ஆம் , 2019–2020–ல் ரூ. 2700000 2020–2021–ல் ரூ. 3300000**

ஆ) பேரூராட்சிகளின் ஆணையர் அறிவுரைப்படி , தொழில்வரி கேட்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா ஆம் எனில் 2019–2020 ம் ஆண்டில் பெற்ற ( அ) பெறவிருக்கும் தொழில்வரித் தொகையின் அடிப்படையில் 2020–2021–ல் எதிர்பார்க்கும் தொழில்வரித் தொகை குறிப்பிடப்பட்டுள்ளதா ?

**ஆம், குறிப்பிடப்பட்டுள்ளது**

இ) செயல் அலுவலர் சிறப்பு கவனம் செலுத்தி கூடுதல் வரிவிதிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**3.குடிநீர் கட்டணம்**

அ) துணை விதிகள் திருத்தி அமைக்கப்பட்டு கட்டண விகிதங்கள் மாற்றி அமைக்கப்பட்டனவா

**ஆம், மாற்றி அமைக்கப்பட்டன**

ஆ) திட்ட மதிப்பீட்டில் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதன் மூலம் கூடுதல் வருவாய் **ரூ. 5000000** எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதில் குறைவு ஏற்படாமல் செயல் அலுவலர் கவனிக்க வேண்டும்.

**4.குத்தகை இனங்கள்**

அ) பேரூராட்சியின் குத்தகை இனங்கள் குத்தகை காலம் முடிவுறுவதை தொடர்ந்து குறைந்தபட்சம் 15 விழுக்காடு வருமானம் கிடைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்த அடிப்படையில் திட்ட மதிப்பீடு தொகை ரூ. **2932000** சேர்க்கப்பட்டுள்ளது

அ) பேரூராட்சி சந்தை பேருந்து நிலையம், வணிக வளாகங்கள் ஏலம் விடப்பட்டதின் மூலம் கிடைக்கும் வருமானம்

**2019–2020–ல் ரூ. 2583000** **2020–2021–ல் ரூ. 2932000**

ஆ) இந்த தலைப்பின் கீழ் வருமானப் பெருக்குவதற்கு செயல் அலுவலர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**5. உரிமக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள்**

ஆ) உரிமக் கட்டணங்கள் ( Trade Licence Fees) கட்டிட உரிமம் மற்றும் பிற கட்டணங்கள் ஆகியவைக்கு மன்ற ஒப்புதலுடன் மூன்றாண்டுக்கொரு முறை திருத்தி அமைத்து கூடுதலாக வருமானம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். இதன் பொருட்டு கட்டண விகிதங்களை நடைமுறைப்படுத்த உரிய அறிவிக்கை வெளியிடப்பட வேண்டும்.

| 6. வரி மற்றும் வரியில்லாத இனங்கள் | நிதி ஒதுக்கீடு<br>2019–2020<br>திருத்திய மதிப்பீடு | 2020–2021<br>திட்ட மதிப்பீடு |
|---|---|---|
| அ) சொத்துவரி | 14000000 | 16000000 |
| ஆ)தொழில்வரி | 2700000 | 3300000 |
| இ) வரியில்லா இனம் | 16583000 | 20932000 |

**தேதியில் மேற்கண்ட தலைப்பில் நிலுவை இல்லை**

**அரசு கட்டிடம், நீதிமன்ற வழக்கிற்கு உட்பட்ட தொகை இருப்பின் 30.03.2020ம் தேதிக்குள் நடவடிக்கை எடுத்து வசூலிக்கப்பட வேண்டும்**

## செலவினம்

**1. பணியாளர் சம்பளம்**

அ) இப் பேரூராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு சம்பளம் மற்றும் பிற படிகள் வழங்க போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கீடு

| | 2019–2020 | 2020–2021 |
|---|---|---|
| | திருத்திய மதிப்பீடு | திட்ட மதிப்பீடு |
| அ) அலுவலகப் பணியாளர்கள் | 2704000 | 3276000 |
| ஆ) வரிவசூல் பணியாளர்கள் | 1622400 | 1965750 |
| இ) துப்புறவுப் பணியாளர்கள் | 5408000 | 6553000 |
| ஈ) குடிநீர் திட்டப் பணியாளர்கள் | 1082000 | 1311000 |
| மொத்தம் | 10816400 | 13105750 |

சொந்த வருவாயில் மேற்கண்ட செலவுக்கு **10.12** சதவிகிதம் கணக்கிடப்பட்டுள்ளது. துப்புரவுப் பணிகளை தனியார் மயமாக்க நடவடிக்கை மேற்கொண்டு பொது சுகாதார தலைப்பில் செலவினத்தை குறைக்க உரியநடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**2. நிர்வாக செலவுகள்** வருடம் செலவு

அ) தொலைபேசி கட்டணம்,எழுது பொருள் படிவங்கள் அச்சிடுதல், செய்தித்தாள் வாங்குதல், நாளிதழில் விளம்பரம் செய்தல் ஆகியவற்றில் சிக்கன நடவடிக்கை மேற்கொண்டு செலவுகளை கணிசமாக குறைக்கப்பட வேண்டும்.

| வருடம் | செலவு |
|---|---|
| 2019–20 | 2300000 |
| 2020–21 | 3570000 |

ஆ) பேரூராட்சியில் பெறப்பட்ட கடன்களுக்கு தவணைத் தொகையை உரிய கெடு தேதிகளில் செலுத்துவதன் மூலம் தண்ட வட்டி செலுத்துவதை தவிர்க்கவேண்டும். அவ்வாறு தண்டவட்டி செலுத்துப்படுவது ஆய்வின்போது தெரிய வந்தால் செயல் அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**கடன் தவணைகள் உரிய காலங்களில் செலுத்தப்பட்டு வருகிறது. தண்ட வட்டி ஏதும் செலுத்தப்படவில்லை.**

இ. பொது சுகாதார வாகனங்களுக்கு எரிபொருள் மற்றும் பராமரிப்பு செலவில் சிக்கனம் கடைபிடிக்க வேண்டும்.

ஈ) குடிநீர் குழாய்கள் உடைப்புகள் பழுது பார்ப்பதில் சிக்கன நடவடிக்கை மேற்கொண்டு செலவினத்தை குறைக்க வேண்டும்

2019–2020 ரூ. **34000000** 2020–2021 ரூ. **45000000**

**3.சாலைப் பராமரிப்பு**

இப்பேரூராட்சியில் கி.மீ சாலைகள் பராமரிக்கப்படுகிறது. இதனை மேம்படுத்த 2018 – 2019ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ. **100000** ம் 2019 – 2020 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ரூ. **250000** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு சாதாரண வருவாயில் **0.19** விழுக்காடு ஆகும். இது போதுமானதாக இல்லை.

பேரூராட்சி மன்றத் தீர்மானத்திற்குட்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு அடுத்து வரும் திருத்திய மதிப்பீட்டில் போதிய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

**4.தெருவிளக்கு வசதி**

இப்பேரூராட்சியில் 4 அடி குழல் விளக்குகள் 1575–ம் சோடியம் ஆவி விளக்குகள்201 ம் பிறவிளக்குகள்533–ம் ஆக மொத்தம் 2309 விளக்குகள் பராமரிக்கப்படுகிறது. இதன் பராமரிப்புக்கு திருத்தியமற்றும் திட்ட மதிப்பீட்டில் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவு சாதாரணவருவாயில் **7.72** விழுக்காடு ஆகும்.

2019–20ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ. 7500000ம், 2020–21ம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ரூ. 10000000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. குடிநீர் விநியோகம்**

இப்பேரூராட்சியில் கூட்டு குடிநீர் திட்டம் அமுலில் உள்ளது. இது தவிர விசைப் பம்புகளும் பராமரிக்கப்படுகிறது. குடிநீர் வடிகால வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தண்ணீர் கட்டணம், பராமரிப்பு கட்டணம், ஆகியவற்றிற்கும், பேரூராட்சி கைப்பம்புகள் மற்றும் விசைப் பம்புகள் பராமரிப்புக்கும் திருத்திய மதிப்பீட்டிலும் , திட்ட மதிப்பீட்டிலும் போதுமான அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இச்செலவினம் சாதாரண வருவாயில் **50.19** விழுக்காட்டில் அடங்குகிறது.

**அரசு மான்யம்**

1. பல்வேறு திட்டங்களின் கீழ் பெறப்படும் அரசு மான்யங்கள் எதிர்பார்க்கப்படுபவை மற்றும் அதன் செலவினம் பற்றித் திட்ட மதிப்பீட்டில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | திட்டம் | ஒதுக்கீடு | செலவு |
|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | 3363000.00 | 3363000 |
| 2 | தூய்மை இந்தியா திட்டம் (தனிநபர்) | 0.00 | 0 |
| 3 | தூய்மை இந்தியா திட்டம் (சமுதாயம்) | 2250000.00 | 2250000 |
| 4 | அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம் | 715500 | 715500 |
| 5 | பூங்கா மற்றும் விளையாடும் இடம் | | 0 |
| 6 | நபார்டு | | 0 |
| 7 | IUDM | | 0 |
| 8 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டம் | 1700000 | 1700000 |
| 9 | மூலதன மான்யம் (ஐமுகு) | 6600000 | 6600000 |
| 10 | இயக்கும் மற்றும் பராமரிப்பு நிதி | 15550000 | 15550000 |
| 11 | 14வா கயைேஉேந | 14964290 | 14964290 |
| 12 | TURIP | | 0 |
| 13 | இதரவை | | 0 |

**2. பிற மான்யங்கள் 2019-2020 -ல் பெறப்பட்ட விபரங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | மாநில பகிர்வு நிதி! | 12823729 |
| 2 | 14வது நிதிக்குழு மான்யம் | 9764290 |
| 3 | முத்திரைத் தாள் கட்டணம் | 0 |

பொது

பேரூராட்சியில் வசூலிக்கப்பட்டு பிற துறைக்கு செலுத்த வேண்டிய நூலகவரி, தொழிலாளர் நில நிதி, வருமான வரி, விற்பனை வரி முதலானவற்றை அவ்வப்போது செலுத்தி வர வேண்டும். பேரூராட்சியில் பெறப்பட்ட கடன்களுக்கு தவணைத் தொகையை ( அசல் மற்றும் வட்டி) உரிய கெடு தேதிகளில் செலுத்தி தண்டவட்டி செலுத்துவதை தவிர்க்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டினை பேரூராட்சி மன்றத்தின் பாாவைக்கு வைத்து அதில் குறிப்பிட்டுள்ளகுறைபாடுகளை நிவர்த்தி செய்து அங்கீகாரம் பெற வேண்டும். வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி பேரூராட்சியின் மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் கண்டுள்ள வேலைகள் மட்டுமே செய்து வர வேண்டும். இதற்கு முன்பு பட்டியல் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறவில்லையெனில் தற்போது மன்றத்திடம் அங்கீகாரம் பெற்று செய்ய வேண்டியது. அவசர நிமித்தம் பணிகள் செய்ய வேண்டி வரும் பொழுது பேரூராட்சியின் மன்றத் தீர்மானத்தின் பேரில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் முன் அனுமதி பெற்று செய்யப்பட வேண்டும். ஒதுக்கீடு செய்துள்ள தொகைக்கு மேல் செலவினம் செய்யக்கூடாது. அதிகப்படியான செலவினம் ஏற்படும்பட்சத்தில் முன் அனுமதி பெற்ற பின்னரே செலவினம் மேற்கொள்ள வேண்டும். அசாதாரண தலைப்பின் கீழ் செலவு ஏற்படின் உரிய அனுமதி பெற்ற பின்னரே செலவு மேற்கொள்ள வேண்டும்.

அ/சு

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கோயம்புத்தூர் மண்டலம்.

பெறுநர்
செயல் அலுவலர்,
கருமத்தம்பட்டி பேரூராட்சி

நகல் : பேரூராட்சிகளின் இயக்குநர், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 108
அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

20/3/2020